**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 26/2023 |
| Name | : Sharmila Banu |
| P.W. | : 1 |
| Father Name | : |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Occupation | : |
| Age | : /2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 30.06.2025

**எதிரிகள் 1 முதல் 4 நீதிமன்றத்தில் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் கணியூர் அக்கிரஹார வீதியில் வசிக்கிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். 1ம் எதிரி எனது கணவர், 2ம் எதிரி நாத்தனார், 3ம் எதிரி மாமனார், 4ம் எதிரி மாமியார். 17.01.2022ம் தேதி எனது குழந்தைக்கு 40 ம் நாள் விசேஷம் எனது வீட்டில் வைத்திருந்தது சம்மந்தமாக 15.01.2022ம் தேதி எனது அம்மா என் கணவர் மற்றும் அவரது குடும்பத்தாருக்கு போன் மூலமாக தகவல் சொன்னார். அன்று மாலை சுமார் 06.00–06.30 மணியளவில் என் கணவர், நாத்தனார், மாமனார், மாமியார் மற்றும் நாத்தனார் மகன்கள் இருவர் என 6 பேரும் காரில் எனது வீட்டிற்கு வந்தார்கள். வீடு திண்ணை வீடு. திண்ணையில் எனது அம்மா மற்றும் அக்கா உட்கார்ந்திருந்தார்கள். வந்த உடன் எனது மாமியார் எனது அம்மா மற்றும் அக்காவை பார்த்து ஏண்டி தேவடியா முண்டை போனில் தான் அழைப்பு சொல்லுவியா நேரில் சொல்ல முடியாதா என்று ஏண்டி நீயெல்லாம் அறுத்த முண்ட என்று சொல்லி உள்ளே வந்தார்கள் . நான் அறுவை சிகிச்சை செய்ததால் குழந்தையுடன் படுத்திருந்தேன். சத்தம் கேட்டு எழுந்து பார்த்த போது எனது கணவர் எனது வலது கன்னத்தில் அடித்துவிட்டார். உங்கம்மாவை வாய மூடச் சொல்லுடி என்று

சொன்னார். என்னுடைய குழந்தையை எதிரிகள் நான்கு பேரும் பிடுங்க வந்தார்கள். என் அம்மா வந்து பேசிக்கொள்ளலாம் என்று சொன்னார் அப்போது என் நாத்தனார் பக்கத்தில் இருந்த பருப்பு மத்தினை எடுத்து எனது அம்மாவின் இடது பக்க கன்னத்தில் அடித்து என் அம்மாவிற்கு தற்போது வரை பார்வை குறைபாடு உள்ளது. எனது அப்பா இறந்துவிட்டார். உங்க வீட்டில் தான் என்ன செய்தாலும் கேட்க ஆளில்லையே என்று பேசி எங்கள் வீட்டின் எதிரே உள்ள சாஜிதா மற்றும் இப்ராகிம் உள்ளே வந்தார்கள். அவர்கள் உள்ளே வரவும் தேவடியா முண்டை ஆளை கூப்பிட்டு விட்டுட்டாங்க என்று சொல்லிக்கொண்டே காரில் ஏறிச் சென்றுவிட்டார்கள். என் அம்மாவிற்கு வலி அதிகமாகி மடத்துக்குளம் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றோம். வெளி நோயாளியாக சிகிச்சை அளித்தார்கள். இது குறித்து கணியூர் காவல் நிலையத்தில் அன்றைய தினமே புகார் கொடுத்தோம். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **அந்த புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** என்னிடம் காட்டப்படும் மத்தினால் தான் என் அம்மாவை அடித்தார்கள். **அந்த மத்து (PR No.24/2022) அ.சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

(1) எனக்கும், எனது கணவருக்கு பெரியவர்கள் பார்த்து திருமணம் நடைபெற்றது. எனது கணவரை பிடித்து போய் தான் திருமணம் செய்தேன் என்றால் சரிதான். பிறந்தநாள் மற்றும் புத்தாண்டிற்கு ஆடைகள் வாங்கிக்கொடுத்து நல்ல முறையில் கவனித்து வந்தார் என்றால் சரிதான். வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் கருவுற்ற சமயத்தில் எனது நாத்தனார் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார் என்றால் சரிதான். என் மேல் இருந்த பாசத்தினால் என்னை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார் என்றால் நான் கருவுற்றிருந்த விவரம் அவருக்கு தெரியாது. அப்போது கரு தங்குவதற்கு ஊசி போட என் நாத்தனார் சொன்னார் என்றால் சரியல்ல. வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

(2) எனது மாமனார் வெளியூரில் வசித்து வருகிறார் என்றால் சரியல்ல வெள்ளக்கோவிலில் வசிக்கிறார். என் மாமனார் 20 வருடங்களாக பெங்களுருவில்

ஆட்டோ ஓட்டி வருகிறார் என்றும் விசேஷ நாட்களுக்கு மட்டும தான் வீட்டிற்கு வருவார் என்றால் சரியல்ல. எனது குழந்தை 09.12.2021ம் தேதி பிறந்தது என்றால் சரிதான். குழந்தை பிறந்த உடன் எதிரிகளுக்கு தகவல் எனது அம்மா சொன்னார். குழந்தைக்கு ஹாஜியை அழைத்து வந்து எதிரிகள் முகம்மது நபி என்று பெயர் வைத்துச் சென்றார்கள் என்றால் சரியல்ல. எனது மகனின் பிறப்புச் சான்றிதழில் பெயர் முகம்மது ஹர்ஷத் என்று உள்ளது. எதிரிகள் என்னையும் குழந்தையையும் பார்க்க வாரவாரம் வருவார்கள் என்றால் நேரம் கிடைக்கும் போது வருவார். 15.01.2022ம் தேதி எதிரிகள் நால்வரும் என் வீட்டிற்கு வந்தார்கள் என்றால் சரிதான். எங்கள் மத நம்பிக்கைப்படி 40 நாள் விசேஷம் முடிந்து என்னையும் குழந்தையையும் கணவர் வீட்டிற்கு அழைத்துச் செல்வார்கள் என்றால் சரிதான் விசேஷ தகவலை என் அம்மா தொலைபேசி மூலமாக சொன்னார்.

(3) விசேஷம் 18.01.2022 என்றால் சரியல்ல. இரண்டு நாட்களுக்கு முன்பே எனது கணவர் வீட்டில் என்னை பார்க்க வந்தார்கள் என்றால் சரியல்ல. அவர்கள் வந்து என்னிடமும் குழந்தையிடமும் பேசிக்கொண்டு இருந்தார்கள் என்றால் சரியல்ல. விசேஷத்தை பற்றி போனில் சொல்லாமல் நேரில் சொல்லியிருக்கலாமே என்று கேட்டார்கள் என்றால் சரியல்ல. அப்போது நான் என் அக்கா மற்றும் அம்மா சேர்ந்து அவர்களை தாக்கினோம் என்றால் சரியல்ல. எனது அக்கா எனது மாமனார் தலையில் அன்னக்கரண்டியால் அடித்து காயம் ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல. என் மானமாரை அடிக்கும் போது என் கணவர் மற்றும் நாத்தனார் தடுக்க வந்தார்கள் என்றால் சரியல்ல. நான், என் அம்மா மற்றும் அக்கா சேர்ந்து என் நாத்தனாரை தலை முடியை பிடித்து இழுத்து அசிங்கப்படுத்தியுள்ளோம் என்றால் சரியல்ல. இது சம்மந்தமாக என் மாமனார் எங்கள் மூவர் மீதும் கணியூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் தெரியவில்லை. என் மாமனாருக்கு ஏற்பட்ட காயம் காரணமாக கிளம்பிவிட்டார்கள் என்றால் சரியல்ல. கணியூர் மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை பெற்று தாராபுரத்தில் சிகிச்சை பெற்றார் என்றால் அதைப் பற்றி தெரியாது. நான் அதை மறைக்கத்தான் பொய்யான புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. என் நாத்தனார் என் அம்மாவை தாக்க பயன்படுத்திய மத்தின் எடை எவ்வளவு என்று தெரியாது.

(4) மத்தினால் அடித்திருந்தார் கன்னத்திலோ உள் பக்கமோ காயம் ஏற்பட்டிருக்கும்

என்றால் காயம் ஏற்பட்டது. எனது அம்மாவிற்கு சிகிச்சை அளித்த மருத்துவர் வழங்கிய காயச் சான்றில் கன்னத்தில் காயம் இருந்ததாக இல்லை என்றால் என் அம்மாவிற்கு காயம் ஏற்பட்டது. நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் நான் சொன்னது போல் என் அம்மாவிற்கு காயம் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. எதிரிகளை பழிவாங்க வேண்டும் என்ற எண்ணத்தில் பொய்யாக இந்த புகாரை எதிரிகள் மீது கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

Sd/- Thiru.M.Dheenadhayalan, B.A., B.L.,

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்

மடத்துக்குளம்

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 26/2023 |
| Name | : Najumunesa |
| P.W. | : 2 |
| Father Name | : |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Occupation | : |
| Age | : /2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 30.06.2025

**எதிரிகள் 1 முதல் 4 நீதிமன்றத்தில் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் கணியூர் அக்கிரஹார வீதியில் வசிக்கிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். அ.சா.1 எனது மகள் ஆவார். 2022 ம் ஆண்டு பொங்கலன்று ஜனவரி மாதம் 15 ம் தேதி மாலை 06.00 மணியளவில் எனது மகளுக்கு குழந்தை பிறந்து 40 நாள் விசேஷம் சம்மந்தமாக எதிரிகளிடம் போன் மூலம் தகவல் சொன்னேன். எதிரிகள் வந்து ஏண்டி தேவடியா போன் மூலமா தான் சொல்லுவியா இது தான் முறையா என்று தகாத வார்த்தையால் திட்டினார்கள். வீட்டிற்குள்ளே வந்து சபானா குழந்தையை எடுத்தார் நான் குழந்தையை பிடுங்கினேன் ஏன் இப்படி செய்கிறீர்கள் என்று கேட்டதற்கு எனது மகளை எனது மருமகன் அடித்துவிட்டார். ஏண்டி எனது தம்பியை கேவலமாக பேசுகிறாய் என்று சபானா என்னை பருப்பு மத்தால் அடித்தார். என்னிடம் காட்டப்படும் பருப்பு மத்தினால் தான் சபானா என்னை அடித்தார். பருப்பு மத்து ஏற்கனவே அ.சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்பட்டள்ளது. எனது இடது கன்னத்தில் ரத்தம் வந்தது. நான் அய்யோ என்று சத்தம் போட்டேன் சத்தம் கேட்டு எதிர் வீட்டைச் சேர்ந்தவர்கள் உள்ளே வந்தார்கள். எதிரிகள் வெளியே சென்றுவிட்டார்கள். நான் சிகிச்சைக்காக மடத்துக்குளம் அரசு

மருத்துவமனைக்கு சென்றேன். தற்போது வரை எனக்கு இடது கண்ணில் பார்வை குறைபாடு உள்ளது. இது சம்மந்தமாக என் மகள் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

(1) என் பேரனின் 40ம் நாள் விசேஷத்திற்கு நான் போன் செய்து எதிரிகளை அழைத்தேன். என் அழைப்பை ஏற்றுக்கொண்டு எதிரிகள் குழந்தையை பார்க்க வந்தார்கள் என்றால் சரிதான். குழந்தையை தூக்கி கொஞ்சினார்கள் என்றால் சரிதான். எதிரிகள் என்னிடம் நேரில் அழைத்திருக்கலாமே என்று கேட்டார்கள் என்றால் சரிதான். குழந்தையை வெளியே தூக்கி வந்தார்கள். நான் குழந்தையை பிடுங்கினேன். எனது மகளின் நாத்தனார் குழந்தையை எடுத்த போது நான் அவரை கண்டவர்களிடம் படுப்பவள் என்று சொல்லி திட்டினேன் என்றால் சரியல்ல. எங்கள் இருவருக்குள்ளும் வாக்குவாதம் ஏற்பட்டது என்றால் சரிதான். என் பெரிய மகள் அன்னக் கரண்டியை எடுத்து லியாகத் அலியை தலையில் அடித்தார் என்றால் சரியல்ல. இது சம்மந்தமாக லியாகத் தலி கணியூர் காவல் நிலையத்தில் எங்கள் மீது புகார் கொடுத்தார் என்றால் சரிதான். அந்த வழக்கும் நிலுவையில் உள்ளது என்றால் சரிதான்.

(2) எதிரிகள் கெட்ட வார்த்தை பேசவில்லை என்றால் சரியல்ல. எதிரிகள் நால்வரையும் நான் அசிங்கப்படுத்தினேன் என்றால் சரியல்ல. நான் சொன்னது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை, எதிரிகள் கெட்ட வார்த்தை பேசவில்லை நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

Sd/- Thiru.M.Dheenadhayalan, B.A., B.L.,

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்

மடத்துக்குளம்

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 26/2023 |
| Name | : Ibrahim |
| P.W. | : 3 |
| Father Name | : |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Occupation | : |
| Age | : /2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 30.06.2025

**எதிரிகள் 1 முதல் 4 நீதிமன்றத்தில் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் கணியூர் அக்கிரஹார வீதியில் வசிக்கிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். அ.சா.1 எனது அக்கா மகள், அ.சா.2 எனது அக்கா. சுமார் 3 வருடங்களுக்கு முன்னால் மாலை 06.00 மணியளவில் நான் எனது மனைவியுடன் வீட்டிற்கு வெளியே உட்கார்ந்து பேசிக்கொண்டு இருந்தேன். எதிரிகள் நால்வரும் காரில் வந்து இறங்கி சத்தம் போட்டுக்கொண்டே உள்ளே சென்றார்கள். அவர்கள் குடும்ப விஷயம் என்று நாங்கள் கவனிக்கவில்லை. எதிரிகள் உள்ளே சென்ற உடன் மீண்டும் சத்தம் வந்ததால் எனது அக்கா வீட்டிற்குள் சென்றேன். நசீர் அவரது மனைவியை கன்னத்தில் ஓங்கி அடித்தார், மாப்பிள்ளையின் அக்கா எனது அக்காவை மத்தால் அடித்தார்கள். சத்தம் போட்ட உடன் எதிரிகள் கெட்ட வார்த்தையால் அவர்களை திட்டி விட்டு சென்றுவிட்டார்கள். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

(1) அ.சா.2 குடும்பத்தை எனக்கு நன்கு தெரியும். எனக்கு அக்கா முறை. எங்கள் வீடு அவர்கள் வீட்டின் எதிரே உள்ளது. நான் போலீசார் விசாரணையில் நானும், எனது

மனைவியும் நடந்து சென்று கொண்டிருந்த போது சத்தம் கேட்டு உள்ளே சென்ற போது எதிரிகள் வெளியே போய்விட்டார்கள் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்குச் சம்பவத்தை பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரியல்ல. நான் சம்பவ இடத்தில் இல்லை வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அ.சா.1 கேட்டுக்கொண்டதன் பேரில் நான் சம்பவத்தை கண்ணுற்றதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அந்த சமயத்தில் நான் அங்கு இல்லை என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

Sd/– Thiru.M.Dheenadhayalan, B.A., B.L.,

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்

மடத்துக்குளம்

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 26/2023 |
| Name | : Bakrudeen |
| P.W. | : 4 |
| Father Name | : |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Occupation | : |
| Age | : /2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 30.06.2025

**எதிரிகள் 1 முதல் 4 நீதிமன்றத்தில் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் கணியூர் அக்கிரஹார வீதியில் வசிக்கிறேன். பொம்மை வியாபாரம் செய்கிறேன். 2022ம் ஆண்டு பொங்கலன்று எதிரிகள் குழந்தையின் 40 நாள் விசேஷத்தை போனில் எப்படி சொல்லாமம் என்று பிரச்சனை ஏற்பட்டது சம்மந்தமாக 28.01.2022ம் தேதி மதியம் 01.30 மணியளவில் காவல் அதிகாரிகள் சம்பவ இடத்திற்கு வந்து வழக்கு சம்மந்தமாக விசாரித்து வரைபடம் வரைந்தார்கள். நான் சம்பவ இடத்தை அவர்களுக்கு அடையாளம் காட்டினேன். சாட்சியாக கையெழுத்து போட்டேன். என்னுடன் முருகானந்தம் என்பவரும் சாட்சி கையெழுத்து போட்டார். என்னிடம் காட்டப்படும் பார்வை மஜரில் உள்ள 1வது கையொப்பம் என்னுடையதுதான். **அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

(1) அ.சா.1 எனது அக்கா மகள். நானும், எனது அக்காவும் ஒரே வீட்டில் முன் பகுதியில் அவர்களும், பின் பகுதியில் நாங்களும் வசிக்கிறோம் என்றால் சரிதான். நான்

சொன்னபடி சம்பவ இடத்தில் போலீசார் விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல. புகார்தாரர்கள் எனது அக்கா குடும்பம் என்பதால் நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான்.

மறு விசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

Sd/- Thiru.M.Dheenadhayalan, B.A., B.L.,

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்

மடத்துக்குளம்